








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 16.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்
- நியமனங்கள்












## இந்திய நிகழ்வுகள்

- **13 சுற்றுலா தளங்களை இணைக்கும்** நாட்டின் முதல் **“பழங்குடிகள் சுற்றுப் பாதைத் திட்டத்தை” First Tribal Circuit** மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் சத்தீஸ்கரில் தொடங்கி வைத்தார்.
    - இச்சுற்றுப்பாதை திட்டமானது, 2014 – 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட **ஸ்வதேஷ் தர்ஷன் Swadesh Dharshan** திட்டத்தின் கீழ் நடைமுறை படுத்த உள்ளது

- ஏழ்மை மற்றும் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்காக சீரான, அணுகக்கூடிய மற்றும் தடையற்ற உதவித்தொகை அமைப்பை உறுதி செய்யும், நாட்டின் முதலாவது தேசிய கல்வி உதவித் தொகை வாயில் **(NSP – National Scholarship Portal)** மற்றும் கைபேசி செயலியை மத்திய சிறுபான்மை அமைச்சகம் வெளியிட்டுள்ளது
    - இச்செயலியின் மூலம் மாணவர்கள் பல்வேறு உதவித் தொகைகள் குறித்த தகவல்களைப் பெற முடியும்.

- **ஜார்கண்ட் மாநில** அரசானது அலுவலகப் பயன்பாட்டிற்காக மின்வாகனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அரசாங்கப் பயன்பாட்டிற்காகச் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களை கொள்முதல் செய்யும் இந்தியாவின் ஐந்தாவது மாநிலமாகவும் கிழக்கிந்தியாவின் முதலாவது மாநிலமாகவும் ஜார்கண்ட் உருவெடுத்துள்ளது
    - இதற்கு முன் அலுவலகப் பயன்பாட்டிற்காக மின் ஊர்திகளை **தில்லி, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா** போன்ற மாநிலங்கள் பயன்படுத்தி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

## உலக நிகழ்வுகள்

- சாகர்மாதா தோழமை – 2 **(Sagarmatha friendship – 2) –**

**நேபாளம் மற்றும் சீனா** நாடுகளுக்கிடையேயான பேரிடர் மேலாண்மை. தீவிரவாதிகளை ஒழித்தல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்ட கூட்டு இராணுவப் பயிற்சி, சீனாவின் தென்மேற்கு சிசூவான் மகாணத்தின் தலைநகர் **செங்டு (Chengdu)** – வில் செப்டம்பர் 17 அன்று நடைபெற உள்ளது

**குறிப்பு:**

சமீபத்தில் பிம்ஸ்டெக் **(BIMSTEC)** நாடுகளின் முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியான **MILEX – 2018 – ல் நேபாளம்** கலந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது

## விளையாட்டு நிகழ்வுகள்

- விளையாட்டுகளில் வாழ்நாள் சாதனைப் படைத்தவர்களுக்கு வழங்கப்படும் **தயான்சந்த் விருதுகள்** மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளில் சிறப்பான மற்றும் தகுதி வாய்ந்த பணிக்காக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் **துரோணச்சாரியா** விருதுகள் பெறுவோரை தேர்வு செய்வதற்காக **"நீதிபதி முகல் முத்கல்". தலைமையில் Justice Mukul Mudgal** 11 பேர் கொண்ட தேர்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது

## அறிவியல் & தொழில்நுட்பம்

- சந்திரனுக்கு சுற்றுலா பயணிகளை முதன்முதலாக அழைத்துச் செல்லும் அமெரிக்காவின் **'ஸ்பேஸ் எக்ஸ்' Space X** என்னும் திட்டத்தின் கீழ் "பிக் பால்கன்" Big Falcon Rocket என்ற மிகப்பெரிய இராக்கெட் தயாரிக்கப்பட்டுள்ளது
  - இதன் மூலம் சந்திரனுக்கு முதன் முறையாக சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்லும் நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெறவிருக்கிறது

## விருதுகள்

- நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் தொற்றா நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதலில் சிறப்பான பங்காற்றியதற்காக

We Shine Academy TM

புகழ்பெற்ற ஐ.நா. நிறுவனங்களுக்கிடையேயான பணிக்குழு விருது (UNIATF – UN Interagency Task Force) மனோஜ் ஜலானிக்கு **Monoj Jhalan** வழங்கப்பட்டுள்ளது

## முக்கிய தினங்கள்

- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கு இந்தி மொழி அதன் கலாச்சார பாரம்பரியம் ஆகியவற்றை பரவச் செய்வதற்காக, இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் **செப்டம்பர் 14 அன்று தேசிய இந்தி திவாஸ்** அனுசரிக்கப்படுகிறது
  **குறிப்பு:**
  1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்தி மொழி அலுவல மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது

## நியமனங்கள்

- பாராளுமன்ற உறுப்பினர்களின் தவறான நடத்தை தெடர்பான புகார்கள் குறித்து ஆய்வு செய்யும், மக்களவையில் நெறிமுறைகள் குழுத் தலைவராக **எல்.கே.அத்வானி Chairman of the Lok Sabha Ethics Committee** மீண்டும் லோக்சபா சபாநாயகரால் (சுமித்ரா மகாஜன்) நியமிக்கபட்டுள்ளார்
  மேலும், அவையில் முன் வைக்கப்படும் மசோதாக்கள் கண்காணிப்பு குழுவின் தலைவராக **"சந்திரகாந்த் பி கைரே" Chandrakanth B Khaire (Committee on Paper Laid on the Table)** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.